# தேவனுடைய நோக்கத்திற்கான பாத்திரம்

Transcribed from a message spoken on October 11, 2015 in Chennai

By *R.S.Milton*

### உண்மையான ஆசீர்வாதம்

தேவனுடைய மக்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டு. ஆனால், நல்ல எதிர்காலம் இருக்க வேண்டு மென்றால் தேவனுடைய மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைக்குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீங்கள் எதை ஆசீர்வாதமாகக் கருதினாலும் சரி, ஆசீர்வதிப்பது தேவனுக்கு ஒரு பிரச்சினையே அல்ல. சிலர் ஆவிக்குரிய செல்வங்களை ஆசீர்வாதமாகக் கருது வார்கள்; சிலர் இந்த உலகத்திற்குரிய, பூமிக்குரிய, செல்வங்களை ஆசீர்வாதமாகக் கருதுவார்கள். எதை நீங்கள் ஆசிர்வாதமாகக் கருதினாலும் சரி, ஆசீர்வதிப்பது தேவனுக்கு ஒரு பெரிய வேலையல்ல. ஆனால், கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்து இந்த யுகத்தின் முடிவிலே ஆசீர்வாதம் என்று ஒன்று இருக்குமென்றால் “அது நமக்குள் கட்டியமைக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் அளவு” மாத்திரமே என்று தேவனுடைய மக்களாகிய நமக்குத் தெரியும். நமக்குள் கட்டியமைக்கப்பட்ட கிறிஸ்து, நாம் பிறருக்குள் கட்டியமைத்த, பிறருக்குப் பரிமாறுகிற, பகிர்ந்துகொடுத்த கிறிஸ்துதான் நாம் கொண்டாடுகிற ஒரே ஆசீர்வாதமாக இருக்கும்.

நாம் கொண்டாடுகிற ஒரே ஆசீர்வாதம் என்றால் என்ன பொருள்? நம்முடைய வாழ்க்கையில் சில ஆசீர்வாதங்கள், நன்மைகள், நடக்கும்போது அதை நாம் மிகவும் கொண்டாடுவோம். இந்த யுகத்தின் முடிவிலே நாம் அப்படிச் சொல்லிச்சொல்லி மகிழ்கிற, கொண்டாடுகிற, நன்மை என்னவென்றால் நமக் குள்ளும், நம்மூலமாய்ப் பிறருக்குள்ளும் பரிமாறப்பட, வெளியாக்கப்பட்ட, கட்டியமைக்கப்பட்ட, கிறிஸ்துவின் அளவு. நான் அப்படிச் சொன்னபோதும்கூட, இந்தப் பூமியிலே எல்லா ஆசீர்வாதங் களுக்கும் தேவன் போதுமானவராயிருக்கிறார்.

### ஆசீர்வாதத்திற்கேற்ற பாத்திரம்

ஆனால், அப்படிப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு தேவனுடைய மக்கள் தக்க, ஏற்ற பாத்திரங் களாக இருக்கவேண்டியது அவசியம். நாம் எப்படிப்பட்ட மனிதர்களாக, நபர்களாக இருந்தாலும் தேவன் நம்மை ஆசீர்வதித்து விடுவார் என்பது தவறான கருத்து. தேவன் தம்முடைய ஆசீர்வாதங் களை வைப்பதற்கு தேவனுடைய மக்கள் ஏற்ற, தகுந்த பாத்திரங்களாக இருக்கவேண்டும். “ஒருவன் இவைகளைவிட்டுத் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப் பான்” (2 தீமோ. 2:21). கனத்திற்குரிய பாத்திரம் அல்லது ஆசீர்வாதத்திற்குரிய பாத்திரம் என்றால் என்ன பொருள்? நம்மெல்லாருக்கும், மிக முக்கியமாக, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்று கின்ற வாழ்க்கையின் தொடக்கத்தில் இருக்கின்றவர்களுக்கு, இது மிக முக்கியமானது. அப்படிப்பட்ட பாத்திரங்களாக நாம் உருவாக்கப்படவில்லையென்றால் தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் இழந்து விடுவோம்.

சவுலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அரசன்தான். தாவீதும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அரசன்தான். சவுலும் தவறுகள் செய்தான். தாவீதும் தவறுகள் செய்தான். ஆனால், இறுதியில் தாவீ தைப்பற்றி தேவனால் “இவன் என் இருதயத்திற்கு ஏற்றவன்,” என்று சொல்ல முடிந்தது. ஆனால், சவுலைப்பற்றி தேவனால் அப்படிச் சொல்ல முடியவில்லை. பேதுருவும் தவறுகள் செய்தான்; யூதா சும் தவறுகள் செய்தான். ஆனால், பேதுருவைப்பற்றி “நான் உயிர்தெழுந்ததை என் சகோதரர்களுக் கும், பேதுருவுக்கும் தெரிவியுங்கள்,” என்று கர்த்தரால் சொல்ல முடிந்தது. யூதாசைப்பற்றி அப்படிச் சொல்வதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவது நாம் தனியாக வும், கூட்டாகவும் எப்படிப்பட்ட பாத்திரமாக இருக்கிறோம் என்பதைப் பொறுத்தது.

நான் இப்போது பகிர்ந்துகொள்கிற காரியங்கள் நாம் அப்படிப்பட்ட ஒரு கனத்திற்குரிய, தேவ னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தக்கவைத்துகொள்வதற்கேற்ற ஒரு பாத்திரமாக, பாத்திரங்களாக இருக்க வேண்டும் என்றால் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

### நான்கு குறிப்புகள்

உங்கள் மனதிலே பதித்துவைப்பதற்காக நான்கு குறிப்புகளை சொல்கிறேன். **முதலாவது, அழைப்பு.** தேவனுடைய மக்களாகிய நாம் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலே அழைக்கப்

பட்டவர்கள். **இரண்டாவது,** தேவன் நம்மை ஒரு இலக்குக்காக, ஒரு **இலக்கை** நோக்கி அழைத்திருக் கிறார். **மூன்றாவது,** அந்த இலக்கு, அந்த குறி ஒன்றை நோக்கி மட்டுமே தேவனுடைய மக்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கையை அமைத்துகொள்ளவேண்டும். அந்த இலக்கை நோக்கி மட்டுமே நாம் ஒருமுகமாக இருக்க வேண்டும் அல்லது **ஒற்றை இருதயம்** அல்லது முழு இருதயம் உள்ளவர்களா யிருக்க வேண்டும். **நான்காவது**, இலக்கை எட்டவும், ஒருமுகம் அல்லது ஒற்றை இருதயம் அல்லது முழு இருதயம் உள்ளவர்களாயிருக்கவும், தொடக்கமுதல் சிறுவயது முதல், சிறு காரியங்கள்முதல் எல்லாவற்றிலும் நாம் **சிட்சிக்கப்பட வேண்டும், பயிற்றுவிக்கப்பட வேண்டும், பழக்குவிக்கப்பட வேண் டும்.**

நான்கு குறிப்புகள் வைத்திருக்கிறேன். **ஒன்றாவது, அழைப்பு**. நாம் தேவனால் அழைக்கப்பட்ட வர்கள். **இரண்டாவது, இலக்கு**. தேவன் நம்மை ஒரு இலக்குக்காக, குறியைநோக்கி அழைத்திருக்கிறார். **மூன்றாவது, நாம் ஒருமுகம், ஒற்றை இருதயம், முழு இருதயம்** உள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த இலக்கை, குறியை எட்டுவதற்கு நாம் ஒருமுகம், ஒரே இருதயமும் முழு இருதயமும் உள்ளவர் களாக இருக்க வேண்டும். **நான்காவது**, அதற்கு தொடக்கம்முதல், சிறுவயதுமுதல், சிறிய காரியங்கள் தொடங்கி எல்லாவற்றிலும் நாம் **பயிற்றுவிக்கப்பட** வேண்டும், பழக்குவிக்கப்பட வேண்டும்.

நீங்கள் குறிப்பெடுத்துக்கொள்ளுங்கள். வசனங்களைக் குறித்துக்கொள்ளுங்கள். இன்றைக்கு சாயங் காலம் ஒரு அரைமணி நேரம் இந்த வசனங்களைக்குறித்து நீங்கள் தேவனிடம் போங்கள். தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திலே "நாம் எங்கிருக்கிறோம்?" என்று நீங்கள் சீர்தூக்கிப்பாருங்கள். சீர்தூக் கிப்பார்த்து, சரிசெய்ய வேண்டிய காரியங்களை நீங்கள் சரிசெய்து கொள்ளுங்கள்.

## 1. நாம் தேவனால் அழைக்கப்பட்டவர்கள்

முதலாவது, நாம் தேவனால் அழைக்கப்பட்டவர்கள். அப்போஸ்தலனாகிய பவுல், "என் தாயின் வயிற் றில் இருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்," (கலா. 1:15) என்று சொல்கிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மேல் அன்புகூர்ந்து நம்மைப் பேர்சொல்லி அழைத்திருக்கிறார். ஏசாயா 43:1யைக்கூடக் குறித்துக்கொள்ளலாம். வசனங்களை வாசிக்கும்போதுகூட அந்த வார்த்தைகளுக்குப்பின் இருக்கிற இருதயத்தை நாம் தவற விட முடியும். காரியம் என்னவென்று கேட்டால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தனிப்பட்ட முறையில் பெயர் சொல்லி என்னை அழைத் திருக்கிறார். நாம் ஒரு மதத்திற்கோ, ஒரு கொள்கைக்கோ, ஒரு தத்துவ அமைப்புமுறைக்கோ நம்மை ஒப்புகொடுக்கவில்லை. சிலர் பாடல், ஆடல், நாட்டியம், நாடகம், கவிதைபோன்ற ஒரு கலைக்குத் தங் களை ஒப்புகொடுத்திருக்கிறார்கள். நாம் அப்படி ஒரு abstractஆன பொருளுக்கு நம்மை ஒப்புக் கொடுக்கவில்லை. நம்மை அழைத்தது ஒரு பொருள் அல்ல. நாம் நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறது ஒரு பொருளுக்கு அல்ல. நம்மை அழைத்தவர் ஒரு நபர். நாம் நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறது ஒரு நபர். ஏனென்றால், அந்த நபர் "என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்," (கலா. 2:20) என்று பவுல் கூறுகிறார்.

"ஒரு பெரிய கூட்டம் இருந்தது. அந்தக் கூட்டத்திலே நானும் இருந்தேன். அப்போது அவர் என்னைப் பேர் சொல்லி வரவழைத்தார்," என்பதல்ல தேவனுடைய அழைப்பு. நாம் தாயின் கருவிலே உருவாகும் முன்பே நம்மைத் தெரிந்துகொண்டு, கிருபையினாலே பெயர்சொல்லி அழைக்கின்றார். "நீ என்னுடைய வன்," என்று சொல்லும் அளவுக்கு அவர் பெயர்சொல்லி அழைக்கிறார். "நாம் ஏதோ காற்றுவாக்கிலே அல்லது வாழ்க்கையின் ஏதோ ஒரு போக்கிலே சில கிறிஸ்தவர்களைச் சந்தித்தோம்; நற்செய்தியைக் கேள்விப்பட்டோம்; இயேசுகிறிஸ்துவை அறிந்துகொண்டோம்," என்பதல்ல. அவர் நம்மைத் தெரிந்து கொண்டு, ஏற்ற காலத்தில் பெயர் சொல்லி அழைத்திருக்கிறார். தாயின் கருவிலே உருவாகுமுன்னே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மைத் தெரிந்துகொண்டார்; ஒரு குறியிட்டு வைத்திருக்கிறார். ஏற்ற காலத்தில் அவருடைய அந்தக் குரலை நாம் கேட்கிறோம். இது ஏதோ எதேச்சையாக நான் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டறிவது அல்ல. ஒருவேளை 22 வயதிலே நாம் இயேசுகிறிஸ்து வினுடைய குரலைக் கேட்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 22 ஆண்டுகளும் உங்கள் பின் னாகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார். ஒருநாள் விடாமல் உன் பின்னால் வந்துகொண்டிருந்தார். இப்படி நான் நினைத்துப்பார்த்ததில்லை.

மிக முக்கியமாக பெற்றோர்கள் விசுவாசிகளாயிருக்கிற குடும்பத்திலிருக்கிற பிள்ளைகள் இருக் கிறார்கள் அல்லவா? அவர்களுடைய நிலைமை மிகவும் ஆபத்தானது. அவர்கள் "எங்கள் பெற் றோர்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்கள். ஆனால், தேவன் எங்களை அழைக்கவில்லை" அல்லது

"பெற்றோர்களை அழைத்ததினாலே அந்த அழைப்பு எங்களுக்கும் உண்டு," என்று அவர்கள் நினைக் கிறார்கள். "God has only children. He has no grand-children." என்று ஒரு சகோதரன் சொல்லுகிறார். கிறிஸ்தவர்களாயிருக்கிற பெற்றோர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகள் இருக்கிறார்கள் இல்லையா? அவர்களும் தேவனால் அழைக்கப்படுகிறார்கள். தாயின் கருவிலே உருவாகும்முன்பே, "இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுடைய வார்த்தையினால் கற்பிக்கப்படுகிற, போதிக்கப்படுகிற, பயிற்றுவிக்கப்படுகிற, பழக்குவிக்கப்படுகிற, சிட்சிக்கப்படுகிற இந்த மகள் அல்லது இந்த மகன் எனக் குத் தேவை," என்று தேவன் இப்படி முன்குறித்ததினால் சிலரை விசுவாசிகளாகிய பெற்றோர்களுக்குத் தேவன் கொடுப்பார். ஆனால், எப்படியாயிருந்தாலும் நாம் ஆண்டவ ரகிய இயேசுகிறிஸ்துவோடு ஒரு தனிப்பட்ட உறவிற்கு வர வேண்டும். இயேசுகிறிஸ்து என்னை பெயர் சொல்லி அழைத்திருக்கிறார்.

## நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தம்-அர்ப்பணம்

அப்படி நாம் அழைக்கப்பட்டவர்கள் என்ற உணர்வு நமக்கு இருக்கவேண்டும். அப்படிப்பட்ட உணர்வு இருந்தால் நாம் நம்மையும், நம்முடைய வாழ்க்கையையும் தேவனுக்கு அர்ப்பணம் செய்வோம். "உன் னைப் பெயர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்" (ஏசாயா 43:1). நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் அவருக்குச் சொந்தமாகக் கொள்ளப்பட்டவர்கள். நாம், நம்முடைய வாழ்க்கை, நமக் குரிய எல்லாமும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தம். "பரலோகத்தில் உம்மையல்லா மல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பம் இல்லை" (சங். 73:25). மனந்திறந்து உங்கள் இருதயத்தலிருந்து தேவனிடம் இந்த வார்த்தையைச் சொல்லுங்கள். "பரலோகத்திலே உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூமியிலே உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பம் இல்லை". வேறே விருப்பம் என்றால் என் படிப்பு, என் வேலை, என் சம்பாத்தியம், என் கணவன், என் மனைவி, என் நண்பர்கள், என் குடும்ப நட்புகள். இந்த உலகத்தில் எவைகளெல்லாம் அருமையாய்க் கருதப்படுகின்றனவோ, அவைகளல்ல என்னுடைய விருப்பம். அழைக்கப்பட்ட எல்லா ரிடத்திலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிற மாறுத்தரம் என்னவென்றால் *அர்ப்பணம்.*

தேவனுடைய பக்கத்தில் அவர் அழைக்கிறார். நம்முடைய பக்கத்தில் நாம் நம்மை அர்ப்பணிக்க வேண் டும். அர்ப்பணம் செய்யாத தேவனுடைய மக்கள் பல்லாயிரம் உண்டு. "நானும், என்னுடையவைகள் எல்லாமும், என்னுடைய வாழ்க்கை முழுவதும் உமக்கு என்பதுதான்," அர்ப்பணம். நான் அதை மிகவும் பாதுக்காப்பாகக் கருதுகிறேன். "இது இயேசுகிறிஸ்துவுக்குச் சொந்தமானது" என்பதைப்போன்ற பாதுகாப்பான ஒரு நிலைமை உண்டா? நம்முடைய வாழ்க்கையிலே நமக்கும், நமக்குச் சொந்தமான பொருள்களுக்கும், நம்முடைய கணவன் மனைவி மக்கள், நம்முடைய அறிவு, நம்முடைய உடல்நலம், நம்முடைய படிப்பு, வேலை, சம்பாத்தியம், எதிர்காலம் எல்லாவற்றிற்கும் இதைவிட ஒரு பாதுகாப்பான கரம் இந்தப் பூமியில் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

## கிறிஸ்துவோடு ஐக்கியம்

அவர் நம்மை அழைத்திருக்கிறார் அல்லது நாம் அவருக்கு அடிபணிந்திருக்கிறோம் என்றால் நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு, இருதயத்தோடு இருதயம் உள்ள நல்ல ஒரு ஐக்கியம், ஒரு உறவு, எப்போதும் இருக்க வேண்டும். "தம்முடைய குமாரனும், நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்," (1 கொரி. 1:9) என்று பவுல் கூறுகிறார். நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம்? நம்முடைய ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாயிருப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இருதயத்தோடு இருதயம் கொண்டுள்ள உறவுதான் ஐக்கியம். "இந்தப் பூமியிலே உம்மை பிரியப்படுத்துவதைவிட மிக முக்கியமானது ஒன்று இல்லை. உம்மைப் புண்படுத்துவதைவிட கடுமையானது என்னுடைய வாழ்க்கை யிலே எதுவும் இல்லை. இந்த இரண்டும்தான் என்னுடைய வாழ்க்கையிலே மிக முக்கியமானது. ஒரு காரியத்திலும் நான் உம்மைப் புண்படுத்த விரும்பவில்லை. எல்லாக் காரியத்திலும் நான் உம்மைப் பிரியப்படுத்த விரும்புகிறேன்," என்பது அர்ப்பணம்.

ஏனோக்கு தேவனோடு நடந்தான். அவன் தேவனால் எடுத்துக்கொள்ளப்பட்டான். காணப்படாமல் போனான். ஆனால், "அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே தேவனாலே நற்சாட்சி பெற்றான்," என்று (எபி. 5:11) வாசிக்கிறோம். அவன் எடுத்துக்கொள் ளப்படுவதற்குமுன்பு தேவனுக்குப் பிரியமாய் நடந்தான். தேவனோடு நடப்பதென்றால் எல்லாக் காரியங் களிலும் அவரைப் பிரியப்படுத்துவதாகும். "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும். என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே, செம்மையான வழிகளிலே, பரிசுத்தவான்கள்

நடந்த அந்த வழிகளிலே, என்னை நடத்தும்," என்று (சங். 139:23, 24) தாவீது ஜெபிக்கிறார். "மீட்கப் படும் நாளுக்கென்று நீங்கள் முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தா திருங்கள்," (எபே. 4:30) என்று வாசிக்கிறோம். "என்னுடைய வாழ்க்கையிலே எந்த அம்சத்திலும் நான் உம்மைப் புண்படுத்தவோ, துன்பப்படுத்தவோ, காயப்படுத்தவோ, துக்கப்படுத்தவோ நான் விரும்ப வில்லை," என்று தேவனிடத்தில் நீங்கள் வாய்விட்டுச் சொல்ல வேண்டும். இதை முழங்காலில் இருந்து தேவனிடம் சொல்லுங்கள். "ஆண்டவரே, எந்தக் காரியத்திலும் நீர் என்னிடத்தில் புண்பட, காயப்பட, துக்கப்பட நான் விரும்பவில்லை. நீர் துக்கப்படுவீர், காயப்படுவீர் அல்லது புண்படுவீர் என்று உணர்ந் தால் அது எவ்வளவு முக்கியமானதாக, அருமையானதாக இருந்தாலும் சரி, அதை நான் விட்டுவிட ஆயத்தமாக இருக்கிறேன்," என்று நாம் சொல்ல வேண்டும்.

## 2. நம்முடைய இலக்கு பரம இலக்கு

தேவன் நம்மை ஒரு இலக்கோடு அழைத்திருக்கிறார். அது "பரம அழைப்பு" (எபி. 3:1). தேவன் நம்மை ஓர் உயர்ந்த இலக்கிற்காக அழைத்திருக்கிறார். அதே இலக்கைப்பற்றி "கிறிஸ்து இயேசு வுக்குள் தேவன் என்னை அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி ஆசையாய்ப் பின்தொடருகிறேன்" (பிலி. 3:14) என்று பவுல் சொல்லுகிறார். இலக்கை நோக்கி என்ப தால் இது உன்னத அழைப்பு. தேவன் நம்மைப் பரத்திற்குரிய மிக உயர்ந்த அழைப்பிற்காக அழைத் திருக்கிறார். அது எந்த அளவிற்கு உயர்ந்த இலக்கு என்றால் அதை நம்மால் நம்ப முடியாது. "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவு மில்லை, அவைகள் மனிதனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1 கொரி. 2:9). "உன்னுடைய வாழ்க்கைக்காக நீ ஒரு இலக்கைத் தெரிந்தெடுத்துக்கொள்," என்று சொன்னால் நாம் எப்படிப்பட்ட ஒரு இலக்கைத் தெரிந்தெடுத்துக்கொள்வோமோ அதைவிட பல கோடி மடங்கு உயர்ந்த ஒரு இலக்கை தேவன் தம்முடைய மக்களாகிய நமக்காகத் தெரிந்தெடுத்து வைத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கைக்கு இலக்கு என்று ஒன்று இல்லை என்பதுபோல் நாம் அங்கும் இங்கும் அலைந்து திரிகிற ஒரு வாழ்க்கை வாழக்கூடாது. திட்டவட்டமான, தீர்க்கமான, ஒரு இலக்கை வைத்து இந்த இலக்கை நாம் எட்ட வேண்டும் என்பதற்காகத் தேவன் நம்மை அழைத் திருக்கிறார்.

நம்முடைய வாழ்க்கையின் முடிவிற்கு வரும்போது "அந்த இலக்கை எட்டினேன் அல்லது எட்ட வில்லை" என்பதற்கு ஒரு வேறுபாட்டைக்கூட நாம் சொல்ல முடியும். "ஓட்டத்தை முடித்தேன்" என்று பவுல் சொல்லும்போது, "தேவன் பூமியிலே எனக்கு வைத்த இலக்கை நான் எட்டினேன்," என்று சொல்ல வேண்டும்.

உங்கள் இருதயத்தில் நான் பதிக்க விரும்புகிற ஒரு காரியம் என்னவென்றால் இலக்கு பொதுவாக மனிதனுடைய திராணிக்கும், இயற்கையான வலிமைக்கும், இயற்கையான வளங்களுக்கும் மிகவும் மிஞ்சினதாக இருக்கும். தேவன் "இதுதான் நான் உனக்காக வைத்திருக்கின்ற இலக்கு." என்று சொல் லும்போது அந்த இலக்கு எப்படி இருக்குமென்றால், "ஓ! இது என்னுடைய திராணியினால், என் னுடைய திறமையினால், என்னுடைய வலிமையினால், என்னுடைய வளங்களினால், இந்த இலக்கை எட்ட முடியாது. நீர் கொஞ்சம் இலக்கை குறைத்துக் கொள்ளும்.," என்று நாம் சொல்லக்கூடும். ஒருவேளை நாம் அப்படிச் சொல்லாவிட்டாலும், தேவன் அப்படிப்பட்ட இலக்கை நமக்கு முன்பாக வைக்கும்போது, அந்த இலக்கிற்கு ஒரு மாற்றாக இன்னொரு இலக்கை நாம் எடுத்துக் கொள்வோம்.

கொலம்பஸ் இந்தியாவைத் தேடி வேற்று திசையில் பயணம் செய்தார். ஏனென்றால், அவருக்கு ஒரு மாபெரும் உண்மை தெரிந்துவிட்டது. "உலகம் உருண்டை; அதனால் வேற்று திசையில் பயணம் செய்தாலும் நாம் இந்தியாவிற்கு வந்து சேர்ந்துவிடுவோம்," என்று நினைத்தார். அவர் பயணம் செய்து ஒரு நிலப்பரப்பை அடைந்தார். மேற்கு நோக்கிப் பயணம் செய்தால் வரப்போகிற மாபெரும் நிலப் பரப்பு இந்தியாதான் என்பதுதான் அவருடைய கருத்து. எனவே, அந்த நிலப்பரப்பை அடைந்தவுடன், "இதோ! இந்தியாவை நான் அடைந்துவிட்டேன்," என்று அவர் சொல்லிவிட்டார். அங்கிருந்த மனிதர் களைப் பார்த்து "இந்தியர்கள்," என்று பெயர்வைத்தார். பிறகுதான் "அது இந்தியாவுமல்ல. அவர்கள் இந்தியர்களுமல்ல. அந்த நிலப்பரப்பு இதுவரை மனிதர்கள் அறியாத ஒரு நிலப்பரப்பு," என்று தெரிய வந்தது. இன்றைக்கு அது அமெரிக்க ஐக்கிய நாடுகளாக இருக்கின்றன.

எனவே, ஒரு இலக்கை நாம் எட்டமுடியாதபோது நாம் எதை எட்டுகிறோமோ அதை தேவனுடைய இலக்காக மாற்றிவிடுவது. தேவன் இஸ்ரயேலர்களை, எபிரேயர்களை, எகிப்திலிருந்து விடுவித்த போது, எகிப்திலிருந்து விடுவித்து அவர்களை வெளியே கொண்டுவருவதல்ல தேவனுடைய இலக்கு. எகிப்திலிருந்து கானானுக்கு வருவதுதான் இலக்கு. எகிப்திலிருந்து என்பதல்ல தேவனுடைய இலக்கு. கானானுக்குள் என்பதுதான் தேவனுடைய இலக்கு. எண்ணாகமம் 13, 14 ஆம் அதிகாரங்களை நீங்கள்

பொறுமையாய் வாசியுங்கள். வெளிச்சத்திலே என்னை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். சீர்தூக்கி, எடை போட்டு, நிறுத்துப் பார்ப்பதென்றாலே பயம். அதுபோல சீர்தூக்கி, எடைபோட்டு, பார்த்தால் நாம் குறைவுள்ளவர்களாய்க் காணப்படுவோம். அதனால் நாம் சீர்தூக்கி, எடைபோட்டு, நிறைபோட்டுப் பார்க்கமாட்டோம். ஆனால், தேவன் எப்போதும் தம்முடைய மக்களை சீர்தூக்கி, நிறுத்து, எடைபோட்டு நம்முடைய கண்களுக்முன்பாய்க் காண் பிப்பார். தேவன் தங்களுக்கு வாக்குறுதி செய்த நல்ல தேச மாகிய கானான் தேசத்தை நாற்பது நாட்கள் சுற்றிப்பார்த்துவிட்டு, ஒரு திராட்சைக்குலையை பன்னி ரெண்டு பேர் சுமந்துகொண்டு வருகிறார்கள். அந்தத் தேசம் அவ்வளவு செழிப்பான தேசம். "இந்த தேசத்தை நம்மால் வெல்ல முடியாது," என்று சொல்கிறார்கள். அவர்கள் அறிக்கையை நீங்கள் வாசித் துப் பாருங்கள். "தெற்கே இப்படிப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். வடக்கே அப்படிப்பட்ட மக்கள் இருக் கிறார்கள். கிழக்கே இப்படிப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். மேற்கே அப்படிப்பட்ட மக்கள் இருக் கிறார்கள்," என்று எதிர்மறையான அறிக்கை கொடுக்கிறார்கள் (எண். 13:30-33) எந்தத் திசையிலே என்னென்ன காரணங்கள் கொடுக்க வேண்டுமோ, அவையெல்லாவற்றையும் பிரமாதமாய், ரொம்ப அருமையாய்க் கொடுக்கிறார்கள். "அவர்கள் பட்டணங்கள் அரணிப்பானவைகள். அங்கிருக்கின்ற மக்கள் பலவான்கள். இராட்சதர்கள் அங்கிருக்கின்றார்கள். ஏனோக்கின் குமாரர்களாகிய இராட்சதர்கள் அங்கிருக்கின் றார்கள். அவர்களுக்குமுன் ாக நாங்கள் வெட்டுக்கிளிகளைப் போலிருந்தோம். எங்கள் பார்வையிலும் வெட்டுக்கிளிகளைப்போலவே இருந்தோம். அவர்கள் பார்வையில் வெட்டுக்கிளிகளாய் இருப்பது ஒரு பொருட்டல்ல. எங்கள் பார்வையிலும் நாங்கள் வெட்டுக்கிளிகளைப்போலவே இருக் கிறோம்".

எப்புன்னேயின் குமாரனாகிய காலேப் என்கிற ஒரு மனிதன் அங்கிருக்கிறான். "நாம் அதைப் போய் வெல்லலாம்," என்று அவன் சொல்லுகிறான். வேதத்தின் கதாப்பாத்திரங்களைப்பற்றி ஆராய்ச்சி செய் கின்ற ஆர்வம் உங்களுக்கு இருக்குமென்றால் ஆராய்ந்துபார்க்க வேண்டிய தலைசிறந்த கதாபாத்திரம் எப்புன்னேயின் குமாரனாகிய காலேப். இது மட்டுமல்ல. காலேபைப்பற்றி எங்கெல்லாம் சொல்லியிருக் கிறதோ, அதையெல்லாம் நீங்கள் வாசியுங்கள். "நாற்பது வயதில் நீர் என்னை வேவுபார்க்க அனுப்பின போது, போரிடுவதற்கு எப்படிப்பட்ட வலிமை எனக்கு இருந்ததோ அதேபோன்ற வலிமை எண்பது வயதிலும் எனக்கு இருக்கிறது," என்று காலேப் சொல்கிறான். "அதனால் சாதாரண போர்களத்தை எனக்குத் தராதேயும். மலைகளும், அரணிப்பான பட்டணங்களும், இராட்சதர்களும் இருக்கின்ற போர் களத்தை எனக்குக் கொடும்," என்று அவன் யோசுவாவிடம் சொல்கிறான். எண்ணாகமம் 13, 14இலே சொல்லப்பட்ட மக்கள் தேவனுடைய மக்கள். "நாம் இந்த வனாந்தரத்திலே செத்துப்போவோம்," என்று சொன்னார்கள். "நம்முடைய மனைவி மக்கள் செத்துப்போவார்கள். எகிப்திலாவது செத்துத்தொலைந் திருக்கலாம். கர்த்தர் நம்மை சாகடிப்பதற்காக இந்த வனாந்தரத்திற்குக் கொண்டுவந்தார்" என்று புலம்பினார்கள்.

வாழ்க்கையின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம் கர்த்தர்தான் என்று சொன்னார்கள். "என் பிரச் சினைகளுக்குக் காரணம் நீதான்" என்று என் மனைவியிடம் சொன்னால் அவள் வாக்குவாதம் செய் வாள். எனவே அப்படிச் சொல்லமாட்டோம். கர்த்தர் வாக்குவாதம் பண்ணமாட்டார் இல்லையா? அவர்தான் ஏசாயா 53யிலே சொல்லப்பட்ட கர்த்தராயிற்றே! அவர் தொன்றுதொடங்கி அடிக்கிற வருக்கு தன் தாடை மயிரைக் கொடுக்கிறவர்தான். "நீர்தான் காரணம்," என்று சொன்னால் அவர் அதையும் அமைதியாக ஏற்றுக்கொள்வார்.

"கர்த்தர் வனாந்தரத்திலே நம்மைச் சாகடிப்பதற்காகக் கொண்டுவந்தார்," என்று முறுமுறுத்தார்கள். எகிப்திலே இவர்கள் என்னமோ சூப்பர் டீலக்ஸ் குளுகுளு அறைகளிலே வாழ்ந்ததுபோலவும், கர்த்த ருக்காக அந்த அருமையான எகிப்தைத் தியாகம் செய்ததுபோலவும், வனாந்தரத்திலே ஒவ்வொரு நாளும் சோறு, தண்ணீர் இல்லாமல் வாழ்கிறதுபோலவும் பேசினார்கள். சிலர், "நான் கிறிஸ்தவனாக மாறினதால்தான் பிரச்சனை," என்று சொல்வார்கள். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்குமுன்பாக இவர்கள் என்னமோ தேனும், கனியும் முப்பாலும் ஓடின சுதந்தர நாட்டிலே வாழ்ந்ததுபோல நினைப் பது உண்டு!

"நாம் வேறொரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு யாத்திராகமத்தைப் பின்னோக்கி தொடருவோம்," என்று தீர்மானித்தார்கள். முன்னோக்கின யாத்திரையல்ல. பின்னோக்கின யாத்திரை. இராத்திரி முழுவதும் அவர்கள் ஜெபம் செய்தார்களா? இல்லை. இராத்திரி முழுவதும் அவர்கள் அழுதார்கள்.

தேவனுடைய இலக்கு நம்முடைய திறமையினாலும், வலிமையினாலும், ஞானத்தினாலும், வளங்களி னாலும் எட்டக்கூடிய ஒன்றல்ல.

### இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருத்தல்

இன்னொன்று தேவனுடைய இலக்கை மட்டும் மையமாய்க் கொண்டுஇருக்காது. உடனடி நன்மை அல்ல; இனி வரப்போகிற நன்மை. என்னுடைய நன்மை மட்டுமல்ல, பல தலைமுறைகள் பலர் பெறப் போகிற நன்மை அது. "அவர்கள் வாக்குறுதி பண்ணப்பட்டவைகளை அடையாமல் தூரத்திலே கண்டு, அவைகளை அணைத்துக்கொண்டு தங்களை இந்த உலகத்திலே அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கை செய்திருக்கிறார்கள்" (எபி. *1:13*) என்று எழுதியிருக்கிறது. மோசேயைப்பற்றி "அவன் இனி வரும் பலன்மேல் நோக்கமாயிருந்து" (எபி. *11:20*) என்று எழுதியிருக்கிறது. அவன் இலக்கைப்பற்றி குறியாயிருந்தான். எகிப்திலே அரசனாக இருப்பதல்ல தேவனுடைய இலக்கு. இன்றைக்கு ஒரு வசதி யான நிலையில் இருக்கிறோம் என்பதல்ல. "தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு அவர் அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார்" (எபி. *11:2*). இனிவரும் பலன், அவருக்குமுன்பாக வைக்கப்பட்ட சந்தோஷம். ஆண்டவராகிய இயேசு சிலுவைக்குப் போகும்போதே பிதாவானவர் கொட்டு அடித்து சந்தோஷத்தைத் தரவில்லை. "இந்தப் பாத்திரம் நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய் யும்," என்பதுபோலத்தான் இந்தப் பூமியிலே தேவன் நமக்கு இலக்கை வைப்பார். அதற்குமுன்பாக ஒரு சந்தோஷம் இருக்கிறது. ஆகவே, அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார். இது இரண்டாவது.

தேவனுடைய இலக்கு நம்முடைய இயற்கையான எண்ணங்களுக்கும், வளங்களுக்கும் திறமைகளுக் கும், திராணிக்கும், வலிமைக்கும் மிகவும் மிஞ்சினதாக இருக்கும். தேவன் ஒரு இலக்கை வைத்தால் அதை நிறைவேற்றவேண்டிய பரம வளங்களைத் தருவது தேவனுடைய பொறுப்பு. மலையினூடாகக் கர்த்தரை பார்க்கும்போது கர்த்தர் மிகவும் சிறியவராகவும், மலை மிகவும் பெரியதாகவும் தெரிகிறது. ஆனால், அப்படிப் பார்க்கக் கூடாது. கர்த்தரினூடாக மலையைப் பார்க்க வேண்டும். அப்போது கர்த்தர் பெரியவராகவும் மலைகள் சிறியவைகளாகவும் இருக்கும். நமக்குமுன்பாக இருக்கும் மாயைகளை நாம் உண்மை என நினைக்கின்றோம்.

அரக்கர்கள் பெரியவர்கள். உலகப்பிரகாரமாக அவர்கள் கணக்குப்போட்டது சரிதான். அவர்கள் அரக் கர்கள். அவர்களுடைய பட்டணங்கள் அரணிப்பானவைகள். நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவ வீரர்கள். இவர்கள் யார் செங்கல் சூளையிலே செங்கல் அறுத்த ஒரு கூட்டம் அடிமைகள். ஒரு கூட்டம் அடிமைகளைப் பிடித்துக்கொண்டு வந்து "பயிற்சி பெற்ற இராணுவ வீரர்களோடு நீங்கள் சண்டை போட்டு இந்த நாட்டை வெல்ல வேண்டும்," என்றால் நிச்சயமாக அது முடியாது. இது இயற்கையான வளங்கள் அல்ல.

### 3. இலக்கை எட்ட ஒருமுகம்

மூன்றாவது, ஒருமுகம். அந்த இலக்கிலிருந்து நம்மைத் திசைதிருப்புவதற்கு, நம்மைச் சிதறடிப்பதற்கு தேவனுடைய எதிரியாகிய சாத்தான் பல முயற்சிகளைச் செய்வான். தேவனுடைய பிள்ளைகள் ஒவ் வொருவரும் தேவனுடைய இலக்கை நோக்கி நகர்ந்து போவார்கள் என்றால் எவ்வளவு பெரிய ஆசீர் வாதத்தை, வெற்றியை, தேவன் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையின்மூலமாகவும், கூட்டு வாழ்க்கையின்மூலமாகவும் தருவார்! ஆனால் மாற்று இலக்குகளை எப்போதும் பிசாசு தருவான். ஒருவேளை அந்த இலக்கின்மேல் நாம் நம் கண்ணை வைத்து விட்டால் போதும்; நம்மைத் திசை திருப்புவதற்கு, நம்முடைய கவனத்தைச் சிதறடிப்பதற்கு, அவன் பல முயற்சிகளைச் செய்வான்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தாம் எடுத்துக்கொள்ளப்படுகிற நாள் சமீபித்திருக்கிறது என்று கண்டு "எருசலேமுக்குப் போகத் தம் முகத்தைத் திருப்பினார்" என்று (லூக்கா *9:51*) என்று தமிழ் வேதாகமத் தில் எழுதியிருக்கும். "He set his face steadfastl, resolutely, like a flint, to go to Jerusalem". தாம் எடுத்துக் கொள்ளப்படப் போகிற நாட்கள் சமீபமாயிருக்கிறதென்று அறிந்து "எருசலேமுக்குப் போவதற்கு அல் லது எருசலேமுக்கு நேராக தம்முடைய முகத்தைப் பாறையைப்போல் திருப்பி வைத்தார்". அப்படி யென்றால் இடதுபுறம் வலதுபுறம் சாய்வது இல்லை. தன்னுடைய இலக்கு ஒன்றை மட்டுமே நோக்கிப் போவது. Singleness of heart என்பதை தமிழில் நான் ஒற்றை இருதயம், முழு இருதயம், என்று சொல்லுகிறேன். ஒரேவொரு திசைதான். "நான் எருசலேமை நோக்கி நகரப் போகிறேன்," என்பதுதான் ஆண்டவராகிய இயேசுவின் நிலைப்பாடு.

### தானியேலின் ஒருமுகம்

தானியேல் ஒவ்வொரு நாளும் தன்னுடைய மேலறையிலே, ஜன்னலை எருசலேமுக்கு நேராகத் திறந்து வைத்து, முழங்கால்படியிட்டு, மூன்றுமுறை ஜெபித்தான் என்று (தானி. *6:10*) எழுதியிருக்கிறது.

மேலறையிலே எருசலேமுக்கு நேராக தன்னுடைய ஜன்னலை திறந்து வைத்து மூன்றுமுறை முழங்கால்படியிட்டு ஜெபித்தான். 30 நாட்களுக்கு ராஜா ஒருவரைத்தவிர வேறு யாரிடமும் எந்த வேண்டுதலும் செய்யக்கூடாது என்று ஒரு கட்டளையிட்டு, பத்திரத்திற்கு முத்திரை வைத்தார்கள். முத்திரை போடப்பட்டது என்று அறிந்தும் தானியேல் தன் வழக்கத்தின்படியே தன்னுடைய வீட்டின் மேலறையின் பலகணிகளைத் திறந்துவைத்து எருசலேமுக்கு நேராக மூன்று முறை முழங்கால்படியிட்டு ஜெபித்தான். தானியேலுக்கு ஒரேவொரு இலக்கு, ஒரேவொரு கவனம்தான் இருந்தது. அது எருசலேம். எருசலேம் திரும்ப கட்டப்பட வேண்டும் என்பது அவனுடைய பாரம். ஒருவேளை இது தன்னுடைய நாட்களில் நடைபெறாமல் போகலாம் என்று தானியேலுக்குத் தெரியும்.

உண்மையான பரிசுத்தவான்கள் எல்லாருமே "என்னுடைய வாழ்க்கையிலே எனக்கு என்ன கிடைக்கும்," என்ற கணக்குப்போட்டு வாழ்வதில்லை.

"என்னுடைய வாழ்நாளிலே நான் எருசலேமைப் பார்க்க முடியாமல் போகலாம். ஆனால், நிச்சயமாக என்னுடைய அடுத்த தலைமுறை, அதற்கடுத்த தலைமுறை, எருசலேமை, எருசலேமின் அலங்கத்தை, எருசலேமின் தேவாலயத்தைக் கட்டுவார்கள். கொலைசெய்துவிடுவேன் என்று ராஜா சொன்னாலும்கூட அந்த இலக்கிலிருந்து கண்களை எடுப்பதில்லை," என்பது தானியேலின் குணம்.

தேவனுடைய மக்களாகிய நமக்குள் அப்படிப்பட்ட குணம் உருவாக வேண்டும். நாம் காற்றுப் பறக்கடிக்கிற பதரைப்போல இருக்கக்கூடாது. "காற்று அப்படி வீசினால் நாங்களும் அப்படி வீசுவோம்; இப்படி வீசினால் நாங்களும் இப்படி வீசுவோம்" என்பதல்ல தேவனுடைய மக்களின் குணம். தேவனுடைய மக்களுக்கு ஒரு எடையில்லை; ஒரு நிறை, ஒரு திடம், ஒரு உரம் இல்லை. துன்மார்க்கர்தான் காற்றுப் பறக்கடிக்கிற பதர்கள் என்று சங்கீதம் 1 கூறுகிறது. ஆனால், தேவனுடைய மக்கள் காற்றுப் பறக்கடிக்கிற ஒரு வைக்கோல் பதரைப்போல் இருக்கக் கூடாது. புறவினத்தார், தேவனை அறியாதவர்கள்கூட, தங்களுடைய இலக்கு சிதறடிக்கக் கூடாது என்பதில் குறியாய் இருக்கிறார்கள்.

### சிறியா ராஜாவின் ஒருமுகம்

ஒரு நல்ல நிகழ்ச்சியை நான் உங்களுக்குச் சொல்கிறேன். யோசபாத்தும், ஆகாபும் சண்டைக்குப் போகிறார்கள். ஆகாப் அறிவாளி. அவன் யோசபாத்திடம் சொல்கிறான். "நீர் சண்டைக்குப் போகும்போது என்னைப்போல் உடையணிந்து கொள்ளும். சிறியா நாட்டு ராஜா தன்னுடைய இரதங்களுக்குத் தளபதிகளாகிய முப்பத்திரண்டு தளபதிகளிடம், "நீங்கள் இஸ்ரயேல் ராஜா ஒருவரோடு மட்டும்தான் யுத்தம் பண்ண வேண்டும். வேறே யாரோடும் யுத்தம்பண்ணக் கூடாது," என்று கட்டளை கொடுக்கிறான். முப்பத்திரண்டு தளபதிகள் இஸ்ரயேல் ராஜாவோடு மட்டும்தான் யுத்தம் பண்ண வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தார்கள். முப்பத்திரண்டு தளபதிகளும் இஸ்ரயேல் ராஜாவைக் கொல்லவில்லை என்றாலும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்.

தேவனை அறியாத மக்கள் தங்கள் இலக்கிலிருந்து, குறியிலிருந்து, தங்களுடைய கவனம் சிதறக் கூடாது என்பதில் குறியாயிருக்கிறார்கள். தேவனை சேவிக்கின்ற தேவனுடைய மக்கள் "அங்கே ஒரு கல்யாணம், இங்கே ஒரு பிறந்தநாள், அங்கே ஒரு பிரியாவிடைக் கூட்டம்" என்று தங்கள் நேரத்தையும், உழைப்பையும் செலவழித்துக்கொண்டிருக்கிறார்களே! "பிரதர் சமுதாய வாழ்க்கை என்றால் இவைகளெல்லாம் இருக்கத்தானே செய்யும்?" என்று நீங்கள் கேட்கலாம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கானாவூர் கல்யாணத்திற்குப் போனார். ஆனால் அவர் பல கல்யாணங்களுக்குப் போகவும் இல்லை. முக்கியமானது அதுதான். நாம் வேதத்தை எப்படிப் பார்ப்போம் என்றால் "இயேசுகிறிஸ்து கானாவூர் கல்யாணத்துக்குப் போனார். அதனால் நான் எல்லாக் கல்யாணத்துக்கும் போவேன்". இன்னொன்று சொல்வார்கள். "அவர் சாட்டை எடுத்துக்கொண்டு அடித்தார். அதனால் நான் எல்லாரையும் சாட்டை எடுத்துக்கொண்டு அடிப்பேன்". அவர் ஒரு கல்யாணத்துக்குப் போனார். பல கல்யாணங்களுக்குப் போகவில்லை. ஒருவன் அவரை விருந்துக்குக் கூப்பிட்டான். அவர் போனார். பலர் அவரை விருந்துக்குக் கூப்பிட்டார்கள். அவர் போகவில்லை.

"நீர் செய்த அற்புதங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறேன். ஒருமுறை என்னுடைய அரண்மனைக்கு வாரும்," என்று ஏரோது சொல்லி அனுப்பினான். அவர் ஒருநாளும் ஏரோதைப் பார்க்கப் போகவில்லை. ஆனால், இயேசு எந்தக் கல்யாணத்திற்குக் கூப்பிட்டாலும் வந்துவிடுவார் என்று நாம் நினைப்போம். பிதாவானவர் போகச் சொன்னால் அந்தக் கல்யாணத்திற்குப் போவோம். "இந்த கல்யாணத்திற்குப் போகவில்லை என்றால் மாமா கோபித்துக் கொள்வார்." என்பதற்காகப் போக வேண்டாம்.

ஒரு சகோதரர் என்னிடத்தில், "என் மகள் பருவத்திற்குவந்தபிறகு ஊரில் விழா வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்," என்று சொன்னார். நான், "நீங்கள் ஊருக்கும் போக வேண்டாம். விழாவும் வைக்க வேண்டாம். பிள்ளை வழக்கம்போல் பள்ளிக்கூடத்திற்குப் போகட்டும்," என்று சொன்னேன். "இல்லை, எங்கள் பரம்பரையிலே கோலாகலமாக நாங்கள் கொண்டாடுவோம்," என்றார்கள். "அது உங்கள் பரம்பரை. அது பிதாவினுடைய சித்தம் அல்ல," என்றேன்.

இன்னொன்று தெரியுமா? 95 சதவீதம் காரியம் முடிந்தவுடன் "நாம் எதையோ சாதித்துவிட்டோம்" என்ற எண்ணம் வந்துவிடும்? "இதற்குமேல் இனி என்ன சாதனை இருக்கிறது?" என்று நாம் நினைப் போம். இன்னும் சாதனை இருக்கிறது.

## நெகேமியாவின் ஒருமுகம்

நெகேமியா ஏறக்குறைய அலங்கம் முழுவதையும் கட்டி முடித்துவிட்டான். இன்னும் தாழ்ப்பாள்கள் மட்டும் போடவில்லை. சன்பல்லாத்தும், தொபியாவும், அரபியனான கேஷேமும் நெகேமியாவுக்குத் தூது விடுகிறார்கள். "வாரும், நாம் கிராமங்கள் ஒன்றில் போய் கலந்தாலோசித்து, எப்படிக் காரியங் களைச் செய்யலாம் என்று கலந்து ஆலோசிப்போம்," என்று கூப்பிட்டார்கள். இது நல்லதுதானே? அவர்களும் எருசலேமிலே வாழ்கிறவர்கள். ஆனால், நெகேமியாவோ, "நான் பெரிய வேலையைச் செய்கிறேன். என்னால் வர முடியாது. நான் வருவதினால் இந்த வேலை மினக்கட்டுப்போவானேன்," என்று பதில் சொல்லி அனுப்பினான். மினக்கடுவானேன் என்றால் பாதிக்கப்படுவானேன், தாமதிக்கப்படு வானேன், நின்றுபோவானேன் என்று பொருள்.

இந்த உலகத்திலே கல்யாணத்திற்கு, பிறந்தநாள் விழாவிற்கு, வீடு பிரதிஷ்டைக்கு எல்லையே கிடையாது. பால் காய்ப்பு விழா, பால் பொங்கும் விழா, திருமண விழா, பிறந்தநாள் விழா எல்லா வற்றிற்குமே ஒரு விழா உண்டு. "நான் வர முடியாது".

நான்கு ஐந்துமுறை சொல்லி அனுப்பினார்கள். நான்கு ஐந்து முறை சொல்லி அனுப்பினால் எப்படியும் கண்டிப்பாக வந்துவிடுவார் என்று நினைத்து மீண்டும் மீண்டும் ஆள் அனுப்புகிறார்கள். நெகேமியா ஒவ்வொரு தடவையும் அதே பதிலைச் சொல்கிறார். "என்னால் வர முடியாது. நான் மிக முக்கியமான வேலை செய்து கொண்டிருக்கிறேன். நான் வருவதால் நான் செய்துகொண்டிருக்கிற வேலை மினக் கெடும்".

கைபேசியைப்பற்றி நான் அடிக்கடிச் சொல்வதுண்டு. கைபேசி ஒரு மனிதனுடைய வாழ்க்கையைக் கெடுக்கும் அளவுக்கு வல்லமையுள்ளது. பல தலைமுறைகளைக் கெடுக்கக்கூடியது அணுமின் நிலை யம் மட்டுமல்ல, கைபேசியும் பல தலைமுறைகளைக் கெடுக்கும். அடுத்த தலைமுறையையும் கெடுக் கும். கைபேசி, டி.வி. தகவல் தொடர்பு இவையெல்லாம் ஒரு பெரிய காந்தம். கண் திறக்கப்பட்ட எந்த மனிதனும் இதைச் செய்வான். பேய் அப்படியே முகமுகமாய் யுத்தம் செய்ய மாட்டான். இடதுகைப் பக்கமிருந்து தாக்குவான். வலதுகைப் பக்கமிருந்து தாக்குவான். பின்னிருந்து தாக்குவான். மேலிருந்து தாக்குவான். பேய் அப்படியே நேரே வந்து தாக்குவான் என்று எதிர்பார்க்கிறோம். பேய் தீயவன். அவன் நேருக்கு நேர் மோதுவதே இல்லை. அவன் பின்னிருந்து நம்மைத் தாக்குவான். இடமிருந்து தாக்குவான். வலமிருந்து தாக்குவான். கீழிருந்து தாக்குவான். கொஞ்சம் கொஞ்சமாய் செல் அரிப்பதுபோல் அரித்து அரித்து அரித்து நம்முடைய நேரத்தை அவன் எடுத்துக்கொண்டு போவான்.

யாரோடாவது பேச வேண்டுமென்றால் நீங்கள் போன் பண்ணி பத்து நிமிடம் பேசி காரியத்தை முடி யுங்கள். அந்தக் காலத்தில் தந்தி அனுப்புவார்கள். இன்று பாட்டுக்கு எதிர் பாட்டு என்பதுபோல் ஆகி விட்டது. இவர்கள் செய்தி அனுப்ப, அவர்கள் மறுசெய்தி அனுப்ப... இது தூது விடுகிற கதை. அந்தக் காலத்தில் இருந்த புறா விடு தூது மாதிரி. இவர்கள் தூது சொல்ல, அவர்கள் மறுதூது சொல்ல என்று பத்து தூதுகள் போக்கும் வரத்துமாயிருக்கும். நான் சொல்கிறேன். இந்த தூது அனுப்புகிற அதே நேரத்தில் அவர்கள் வேறொரு முக்கியமான வேலையாகிய படிக்கிற வேலையும் செய்து கொண்டிருப்பார்கள். இந்தத் தூது, மறுதூது என்று அரைமணி நேரம் போய்க்கொண்டிருக்கும். இந்தத் தூது விவகாரத்தைப் பத்து நிமிடம் பேசி முடித்துவிட்டால் மீதமுள்ள இருபது நிமிடம் "தரமுள்ள நேரமாக" இருக்கும்.

நம்முடைய மனமும், நம்முடைய இருதயமும், நம்முடைய உடலும் ஒரே காரியத்தில் ஒருமுகமாய், ஒற்றை இருதயமாய், முழு இருதயமாய் நாம் அதில் செலுத்துவோம்.

ஒற்றை இருதயம் இல்லாத மனிதனை தேவன் ஒருநாளும் ஆசீர்வதிக்க முடியாது. நான் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதுபோல் தோன்றலாம். மனதிற்குள் சிரித்துக்கொள்ளாதேயுங்கள். ஆனால், முகத்

தைப் பார்த்து நீங்கள் ஏமாந்துவிட வேண்டும். இந்த வார்த்தையினுடைய தீவிரத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**எலிசாவின் ஒருமுகம்**

"உனக்கு இன்னொரு பதிலாள் நீ எடுத்துக்கொள்," என்று எலியாவிடம் தேவன் சொல்கிறார். ஏனென்றால், எலியா சோர்ந்து போகிறான். "அங்கே எலிசா என்று ஒரு மனிதன் இருக்கிறான். அவன்மேல் உன் சால்வையைப் போடு. அவன் உனக்குப்பின் என் வேலையைச் செய்வான்," என்று தேவன் சொல்லுகிறார். எலியா எலிசாவைச் சந்தித்து தன்னுடைய சால்வையைப் போடும்போது எலிசா வயலில் பன்னிரெண்டு ஏர் பூட்டி உழுதுகொண்டிருந்தான். ஒரு ஏர் பூட்டி உழுவதை நான் பார்த்திருக்கிறேன். இரண்டு மாடு. பன்னிரெண்டு ஏர் என்றால் எத்தனை மாடு? ஒரு மனிதன் அத்தனை மாடுகளைப் பூட்டி உழுகிறானென்றால் அவன் எப்படிப்பட்ட மனிதன்? அவன் தான் செய்கிற எதையுமே அறைகுறையாகச் செய்வதில்லை என்று பொருள். நாம் ஒரு வேலை செய்கிறோம் என்றால் நம் முழு இருதயத்தையும் செலுத்தி அதை நாம் செய்ய வேண்டும் அல்லது செய்யக் கூடாது. எலியா சால்வையைப் போட்டபிறகு எலிசா எலியாவைப் பின்பற்ற வருகிறான். எலியாவைப் பின்பற்ற வரும்போதும் அதே முழு இருதயத்தோடுதான் பின்பற்ற வருகிறான். அதே கலப்பையை வெட்டி விறகாக்கி, அதே மாடுகளைப் பலிகொடுத்துவிட்டுப் பின்பற்ற வருகிறான். எந்த முழு பலத்தோடு உழுகிற வேலையைச் செய்தானோ அதே முழு பலத்தோடு கலப்பையை வெட்டினான், மாட்டைப் பலிகொடுத்தான்.

2 இராஜாக்கள் 13ஆம் அதிகாரத்திலே ஒரு நிகழச்சி இருக்கிறது. தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்புகிறார். "நீ போ. போய் அங்கிருக்கும் பலிபீடத்திற்கு எதிராகத் தீர்க்கதரிசனம் சொல்லு. சொல்லிவிட்டு நேரே வந்துவிட வேண்டும். அங்கே உணவு உண்ணக் கூடாது. தண்ணீர் குடிக்கக் கூடாது. போன வழியாய்த் திரும்பி வரக்கூடாது," என்று சொல்லி அனுப்புகிறார். தேவனுடைய மக்கள் அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும். சக தீர்க்கதரிசியோடு கொஞ்சம் சகவாசம், ஐக்கியம், பண்ணிவிட்டு, "எப்படி இருக்கிறீர்கள் பிரதர்? கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நன்றாக இருக்கிறீர்களா?" என்று நேரத்தை வீணாக்குவது..."இது ரொம்ப கடுமையான வாழ்க்கையாக இருக்கிறதே! ரொம்பப் பத்தியமான வாழ்க்கையாக இருக்கிறதே!" என்று நீங்கள் நினைக்கலாம். தேவனுடைய உயர்ந்த இலக்கை நிறைவேற்ற வேண்டுமென்றால் தேவனுடைய மக்களுடைய வாழ்க்கை பத்தியம் நிறைந்த வாழ்க்கையாகத்தான் இருக்கும். ஆனால், ஒரு நாளிலே நாம் அதன் கனியை அனுபவிப்போம். நாம் மட்டுமல்ல. பல சந்ததிகள் அந்தக் கனியை அனுபவிக்கும்.

தேவனுடைய மக்கள் குறி தவறாமல் ஒருமுகத்தோடு தங்கள் வேலையைச் செய்ய வேண்டும். இடது புறம் வலதுபுறம் சாய்வது, அதைச் செய்வது, பக்கத்திலே வந்த இராஜாவோடு பேசுவது, மந்திரியோடு பேசுவது, கிழட்டுத் தீர்க்கதரிசியோடு பேசுவது, கிழட்டுத் தீர்க்கதரிசியின் மகனோடு பேசுவது, கடையிலே, டீ கடையிலே நின்று நாட்டுநடப்புகளைப்பற்றிப் பேசிவிட்டு, "இராஜா என்ன வழியிலே போய்க்கொண்டிருக்கிறார்? சட்டங்களெல்லாம் எப்படி இருக்கிறது? அடுத்த தேர்தலில் யார் ஜெயிப்பார்? கிறிஸ்தவர்களுக்கு ரொம்பத் துன்புறுத்தல் இருக்கிறதே. சுவிசேஷத்தை அறிவிக்க முடியுமா?" என்று தங்கள் கவனத்தைச் சிதறடிக்கிறார்கள்.

நமக்குத் துன்பம் இந்த இருபதாம் நூற்றாண்டில் வந்ததல்ல. தொன்றுதொட்டு நாம் இப்படித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்த நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவோடு, இந்தக் கல்லின்மேல் மோதுகிறவன் நொறுங்கிப்போவான். இந்தக் கல் எவன்மேல் விழுமோ அவன் நசுங்கிப்போவான். ஆகவே, நாம் அரசியல் பேசிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அரசியல், தொழில், வணிகம்.

**4. இலக்கை அடைவதற்கு சிட்சை**

கடைசியாக சிட்சை. இப்படிப்பட்ட மிக ஆசீர்வாதமான இலக்கை அடைய வேண்டுமென்றால், சிறு வயது தொடங்கி சிறிய பெரிய காரியங்கள் எல்லாவற்றிலும் நாம் பழக்குவிக்கப்பட வேண்டும், பயிற்றுவிக்கப்பட வேண்டும், சிட்சிக்கப்பட வேண்டும். "*என் கைகளைப் போருக்கும், என் விரல்களை யுத்தத்திற்கும் பழக்குவிக்கிற என் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்,*" (சங். 133:) நம்முடைய வாழ்க்கையிலே தேவன் நம்முடைய சிறிய காரியங்களைக்கூடத் தொடுவார். தொடுவதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். தொட்டாலே நாம் வெகுண்டெழுந்து அல்லது சுருண்டு மடிந்து விழுவோம் என்றால் தேவன் நம்மைத் தொட முடியாது. ஒன்று, "இந்தத் தொடுகிற வேலையெல்லாம் வைத்துக்கொள்ளாதேயும்," என்று வெகுண்டெழுவோம் அல்லது "என்னால் அதைச் செய்ய முடியாது," என்று சுருண்டுவிழுவோம்.

கோலியாத்தோடு சண்டை போடுவதற்கு தாவீது வரும்போது சவுல் அவனிடம், "இளவயது முதற்கொண்டு அவன் போர்வீரன். நீயோ இளைஞன்," என்று சொல்லுகிறான். ஆனால் உண்மை என்ன

வென்றால் ஒருவேளை கோலியாத்து இளவயதுமுதற்கொண்டு வெளிப்படையான போர்வீரன். தாவீது இளவயதுமுதற்கொண்டு மறைவான ஒரு போர்வீரன். “இராஜாவே, ஒருமுறை நான் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது ஒரு கரடி வந்தது. இன்னொரு முறை ஒரு சிங்கம் வந்தது. நான் கரடியோடும், சிங்கத்தோடும் சண்டைபோட்டு என்னுடைய ஆட்டுக்குட்டிகளை மீட்டுக்கொண்டேன்,” என்று தாவீது சொல்லுகிறான். நமக்குத் தெரிந்த ஒரே தற்காப்பு ஓடுவதுதான். சண்டை போடுவது நம்முடைய தற்காப்புகளில் ஒன்று அல்ல. ஒரு சிங்கம் வந்து ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டு போனால் “ஒரு ஆடு போனால் போகட்டும். என் உயிர் பெரிதா அல்லது ஆடு பெரிதா? என் உயிர்தான் பெரியது,” என்று இருந்துவிடுவோம். ஆனால் எது பெரியது என்பதோ அல்லது என் உயிர் பெரியதா அல்லது ஒரு ஆட்டுக்குட்டியின் உயிர் பெரியதா என்பதல்ல காரியம். காரியம் என்னவென்றால் இது தேவன் கொடுத்த பொறுப்பு.

சவுல் இப்படிப்பட்ட ஒரு ஆளைப் பார்த்திருப்பானா? ஒரு சிங்கத்தோடு சண்டைபோட்டு ஒரு ஆட்டுக் குட்டியைக் காப்பாற்றினவன். “தம்பி என்ன கொஞ்சம் அதிகமாகப் பேசுவதுபோல் தெரிகிறதோ! நம்புகிறது மாதிரி இல்லையே!” என்று சவுல் நினைத்திருக்கலாம். சிறுவயதுமுதற்கொண்டு அவன் போர்வீரன். தேவன் தருகிற சிறிய பொறுப்புகளைக்கூட உயிரைக் கொடுத்து செய்ய வேண்டும். கவண்கல் வீசுவதற்குக்கூட பயிற்சி வேண்டும்.

பாத்திரம் கழுவுகிற வேலை, கழிப்பறையைச் சுத்தமாய் வைக்கிற வேலை, குளித்து முடித்தபின் அங்கு முடி விழுந்துகிடந்தால் அந்த முடியை எடுத்துப்போட்டு சுத்தம்பண்ணுகிற வேலைபோன்ற எல்லா வேலைகளையும் முழுமூச்சுடன் செய்ய வேண்டும். “கொஞ்சம் நேரத்திற்குமுன்பு உயர்ந்த இலக்கு, பரம அழைப்பு, ஒருமுகம் ஆகியவைகளைப்பற்றிப் பேசிவிட்டு இப்போது இப்படிப்பட்ட தாழ்வான காரியங்களைப்பற்றிப் பேசுகிறீர்களே!” என்று நினைக்க வேண்டாம்.

ஒரு பேப்பர் கீழே கிடந்தால் அதை வேறு யாராவது எடுத்து குப்பைத் தொட்டியிலே போடுவார்கள் என்று இருக்கக் கூடாது. எந்த வீட்டிற்குப் போனாலும் சரி, எந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போனாலும் சரி, தேவனுடைய மக்களுக்கு அந்தப் பயிற்சி வேண்டும். “அவர்கள் வேறு யாருக்காகவும் காத்திருக்க மாட்டார்கள். இந்தக் குப்பையை எடுத்து அவர்கள் குப்பைத் தொட்டியில் போடுவார்கள்,” என்ற சாட்சி இருக்க வேண்டும். பயிற்றுவியுங்கள். குனிந்து குப்பையை எடுங்கள். சிலரை நான் பார்த்திருக்கிறேன். நின்றுகொண்டே குனியாமல் காலால் குப்பையை எடுத்துப் போடுவார்கள். முதுகு குனியாது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஐயாயிரம் பேருக்குச் சாப்பாடு கொடுப்பதற்கு மக்களை வரிசை வரிசையாக உட்கார வைக்கிறார். “பிரதர், அப்படியெல்லாம் வரிசை வரிசையாய் உட்கார வைக்க வேண்டும் என்று அவசியமே கிடையாது,” என்று சொல்பவர்கள் உண்டு. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீனையும்கொண்டு ஐயாயிரம் பேர்கள் சாப்பிட்டார்கள் என்கிற உண்மையை இயேசுகிறிஸ்து எப்படித் தெரிந்துகொண்டார்? எல்லாரையும் எண்ணச் சொன்னாரா? எல்லாரையும் வரிசையிலே வந்து வாங்கிவிட்டுப் போகச் சொன்னாரா? இல்லை. ஐம்பது ஐம்பது பேராக உட்காரச் சொன்னார். “அப்படி யென்றால் நாங்களெல்லாம் உட்கார மாட்டோம்,” என்று அந்த மக்கள் அடம்பிடித்தார்களா? இல்லை.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபிறகு எழுந்து சென்றார். அவருடைய சீடர்கள் கல் லறைக்கு உள்ளே வந்து பார்த்தபோது அவருடைய சீலை அவருடைய தலைமாட்டிலே மடித்து வைக் கப்பட்டிருந்ததைக் கண்டார்கள். ஒரு சகோதரன், “நான் மட்டும் இயேசுகிறிஸ்துவாக இருந்திருந்தால் உயிர்த்தெழுந்தவுடனே யாராவது வந்து என்னைப் பிடித்துவிடப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் வேகமாக கல்லறையை விட்டுப் போய் விட வேண்டும் என்று எல்லாவற்றையும் அப்படியே போட்டு விட்டுப் போயிருப்பேன்,” என்று சொன்னார். அவர் கல்லறையைவிட்டுப் போகும்போது எல்லாவற்றை யும் மடித்துவைத்துவிட்டுப் போனார்.

நம்மைப்போல் “பஸ் போய்விடப் போகுது” எனபதற்காக அப்படியே எல்லாவற்றையும் அங்கங்கே அப்படியே போட்டுவிட்டுப் போகவில்லை. Pants, Towel எல்லாம் கட்டிலிலே கிடக்கும். லுங்கி அந்த நாற்காலியிலே இருக்கும். போர்வை கசங்கினது கசங்கினபடி இருக்கும். இது நம் ஒழுங்கு.

உயிர்த்தெழுந்தாயிற்று. அதுதானே காரியம். சீலை எப்படிக் கிடந்தால் என்ன என்று நினைக்கிறீர்களா? இதெல்லாம் ஒரு பொருட்டா?

அருமையான பரிசுத்தவான்களே, தேவன் கனத்துக்குரிய பாத்திரங்களைத் தேடுகிறார். கனத்திற்குரிய பாத்திரங்களாக அவர் நம்மை அழைத்திருக்கிறார். முதலாவது, **நாம் அழைக்கப்பட்டவர்கள்.** என் னுடைய பெற்றோர்கள், என்னுடைய நண்பர்கள் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்கள் என்பதற்காக நான் இயேசு கிறிஸ்துவைப் பினபற்றவில்லை. அவர் பெயர் சொல்லி என்னை அழைத்தார். குறிப்பிட்ட

விதத்திலே என்னைப் பெயர் சொல்லி அழைத்தார். அவருக்கு நம்மை அர்ப்பணித்திருக்க வேண்டும். அவரைத்தவிர இந்தப் பூமியிலே நமக்கு வேறே விருப்பம் இருக்கக் கூடாது.

இரண்டாவது, **தேவன் நம்மை அழைத்தது மிக உயர்ந்த அழைப்பு**. உயர்ந்த இலக்கிற்காக நம்மை அழைத்திருக்கிறார். அது மனிதனுடைய இயற்கையான பலத்தினால் எட்டக்கூடிய ஒரு இலக்கு அல்ல. எனவே தேவனுடைய இலக்குகளை நம்முடைய மட்டத்திற்கு நாம் கீழே கொண்டு வரக்கூடாது. தேவ னுடைய இலக்கின் மட்டத்திற்கு நாம் உயர வேண்டும். அது விசுவாசத்தினால் ஆகும். என்ன விசுவாசம்? அந்த இலக்கை எட்டுவதற்கு போதுமான கிருபைகளையும், கொடைகளையும் தர வேண் டும்; அவர் நமக்குக் காலேபின் ஆவியைத் தர வேண்டும்.

மூன்றாவது, இந்த இலக்கு ஒன்றைத்தவிர வேறு காரியங்களில் ஈடுபட வேண்டாம். சிறிய காரியங்கள், பெரிய காரியங்கள் 90 சதவீதம் நாம் முடித்துவிட்டபிறகும், உலா வரலாம், அந்த சகவாசம், இந்த சகவாசம் வைத்துக்கொள்ளலாம், அந்தப் பொழுதுபோக்கு, இந்தக் கேளிக்கை என்று இருந்துவிடா தீர்கள். நீங்கள் தயவுசெய்து தவறாக நினைக்கக் கூடாது. “நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பொழுது போக்கே இருக்கக் கூடாது என்கிறீர்களா? சினிமா பார்க்கக் கூடாது. ஒரு பாட்டு கேட்கக் கூடாது. பிறந்தநாள் விழாவிற்கு போகக் கூடாது. கல்யாணத்துக்குப் போகக் கூடாது என்கிறீர்களா? சாமியா ராகச் சொல்கிறீர்களா?” என்று நினைக்கலாம். நான் அப்படிச் சொல்லவில்லை. இயேசுகிறிஸ்து கல்யாண வீட்டிற்குச் சென்றார் என்று நான் சொன்னேன். இயேசுகிறிஸ்து விருந்துக்குச் சென்றார். ஆனால், **ஒருமுகம் இருக்க வேண்டும்**. பிதாவானவர் போகச் சொன்னால் போகலாமேதவிர மனிதர் களைப் பிரியப்படுத்துவதற்காக அல்லது சமூக உறவு கொள்வதற்காக, ‘எங்கள் தாத்தா வருவார்கள். பாட்டி வருவார்கள். மாமா வருவார்கள். மச்சான் வருவார்கள் என்பதற்காக நாம் போகக்கூடாது. அப்படியென்றால் நாம் நிச்சயமாக ஒருமுகமுள்ளவர்கள் அல்ல.

நான்காவது, **சிறிய காரியங்கள் தொடங்கி பரிசுத்த ஆவியினால் சிட்சிக்கப்படுவதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்**. “என் மகனே கர்த்தருடைய சிட்சையை நீ அற்பமாக எண்ணாதே”. ஒன்று உதாசீனம்படுத்து வது. “பேப்பரைப் பொறுக்கி எடுக்கச் சொல்லிவிட்டார். குளியலறையில் முடி இருந்தால் எடுக்கச் சொல்லிவிட்டார். கழிவறையின் தொட்டியில் ஒரு தூசிகூட இருக்கக் கூடாது. இதெல்லாம் பெரிய பரிசுத்தமா?” என்று உதாசீனம் செய்யாதீர்கள். நம்முடைய பயிற்சி, பழக்கம். சிட்சை அங்கே ஆரம்பிக் கிறது. தீமோத்தேயுவிற்கு “சிறுவயதுமுதற்கொண்டு உன்னை இரட்சிப்புக்கு ஏதுவாக்குகின்ற வேத வாக்குகளை நீ அறிந்தவனாயிருக்கிறாய்” என்று பவுல் சொல்கிறார். எங்கே ஆரம்பிக்கிறது அது? சிறுவயது முதற்கொண்டு தாவீது போர்வீரன். எது முதற்கொண்டு? சிறுவயது முதற்கொண்டு. மடித்து வைப்பதோ, படிப்பதோ, காரியங்களைச் சுத்தம் செய்வதோ சிறுவயது முதற்கொண்டு. சிறிய பெரிய காரியங்களில் இப்படிப்பட்ட ஒரு பயிற்சிக்கு, பழக்கத்துக்கு நாம் நம்மை ஒப்புவித்தால் நல்லது.

ஐந்தாவது, **ஏற்ற காலத்தில் கனத்துக்குரிய பாத்திரங்களாக நம்மை மாற்றுவார்**. உங்களுடைய மனதைப் புண்படுத்துவது என்னுடைய நோக்கம் அல்ல. நீங்கள் தேவனோடு இடைபடுங்கள். உண்மை யான வழி, பரிசுத்தவான்கள் எல்லாரும் நடந்து சென்று எந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார் களோ அதே வழியில் நான் என்னுடைய வாழ்க்கையை வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். தயவுசெய்து உங்களைத் தாழ்த்தி, மனந்திரும்ப வேண்டுமென்றால் மனந்திரும்பி உங்களை ஒப்புக் கொடுங்கள். நான் ஒப்புக்கொடுக்கிறேன். என்னுடைய வாழ்க்கையை நான் வீணாக்க விரும்பவில்லை. பவுல் சொல்கிறார். “அந்த இலக்கை நோக்கி ஆசையாய்ப் பின்தொடருகிறேன்” என்பது என் இருதயத் தின் கதறுதலாக இருக்கும். ஆமென்.